சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண். 2791 /பிசி/2022 நாள். 21.07.2022

----------

பொருள்: பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - பள்ளிக்கல்வித் துறையின் வளர்ச்சி மற்றும் மாணவர்களின் நலன் சார்ந்த திட்டங்களின் செயல்பாடுகள் - கல்வி இணை செயல்பாடுகள் - பராமரிக்கப்படவேண்டிய பதிவேடுகள் - உரிய அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

.........

தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் கற்றல் மற்றும் கற்பித்தல் பணிகளை மேலும் மேம்படுத்தும் விதமாக, அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து ஆய்வு அலுவலர்கள் தங்கள் ஆளுமைக்குட்பட்ட பள்ளிகளில் கீழ்காணும் செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்ய தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளித் திறம்பட செயல்படுவதை உறுதிப்படுத்தும் ஆய்வு கூறுகள்.

1. பள்ளி வளாகத் தூய்மை.
2. வகுப்பறைத் தூய்மை / சுத்தமான குடிநீர் / கழிப்பிடத் தூய்மையை தினந்தோறும் கண்காணித்தல்.
3. ஆசிரியர்களின் தினசரி வருகை.
4. மாணவர்களின் 100 சதவிகித வருகையை உறுதி செய்தல்.
5. ஆசிரியர்களின் பாடத்திட்டம், பாடக் குறிப்பேடு, தயாரிப்பு கையேடு மற்றும் அதன்படி வகுப்பறையில் கற்பித்தல்.
6. ஒவ்வொரு பாடத்திற்கும் மாணவர்கள் அடைந்திருக்க வேண்டிய கற்றல் விளைவுகள் (Learning Outcomes)
7. கற்பித்தல் சிறக்க பயன்படுத்த வேண்டிய கல்வி உபகரணங்கள்.
8. மாணவர்களின் கற்றல் திறன் அடிப்படையில் ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் திறனை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான கற்றல் விளைவுகளை அடைய ஆசிரியர்கள் உதவுதல்.
9. மாணவர்களின் கற்றல் நிலைக்கு ஏற்றவாறு கற்பித்தல் மற்றும் வீட்டுப் பாடம் கொடுத்து அவற்றை உடனுக்குடன் பிழைத் திருத்தம் செய்து, மாணவர்களுக்கு கல்வி மேல் மிகுந்த ஈடுபாட்டை உருவாக்குதல்.

10. பாடத்திட்டம் மற்றும் கால அட்டவணையை ஒவ்வொரு வகுப்பறையிலும் இருப்பதை உறுதி செய்தல்.

11. வகுப்புகள் தோறும் வேலை முடிப்பு பதிவேடு (Workdone Register) தினசரி பராமரித்து அதில் பதிவிடுதல்.

12. ஒவ்வொரு பாடத்திற்கும் பாடக் குறிப்பேடுகள், வீட்டுப் பாடக்குறிப்பேடுகள், மொழிப் பாடங்களுக்கு கையெழுத்து நோட்டு, கட்டுரை நோட்டு, அறிவியல் பாடத்திற்கு செய்முறை குறிப்பேடு, கணித பாடத்திற்கு வரைபடம் மற்றும் வடிவியல், சமூக அறிவியல் பாடத்திற்கு நில வரைபடம் (MAP) போன்றவற்றை மாணவர்கள் சரிவர பயன்படுத்துதல், அவற்றை ஆசிரியர்கள் திருத்தி கையொப்பமிடுதல், தலைமையாசிரியர்கள் மேற்பார்வையிடுதல்.

13. நூலகப் புத்தகங்கள் / செய்தித்தாட்களை மாணவர்கள் மதியம் உணவு இடைவேளைக்குப் பிறகு (பிற்பகல் 1.00 மணி முதல் 1.20மணி வரை) பயன்படுத்தி தம் வாசிப்புத் திறனை வளர்க்க ஊக்கப்படுத்துதல்.

14. மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், பொதுத் தேர்வில் அதிக அளவில் மாணவர்கள் தேர்ச்சி பெற காலை / மாலை நேரங்களில் சிறப்பு பயிற்சி வகுப்புகளும் / எழுதப்படிக்கத் தெரியாத மாணவர்கள் இருந்தால் அவர்களுக்கு மொழிப் பாடத்தில் சிறப்புப் பயிற்சியும், கணிதப்பாடத்தில் அடிப்படை செயல்பாடுகளில் பின்தங்கிய மாணவர்களுக்கு (இடைநிலை)சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடத்துதல். (ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு நாள் என பாட ஆசிரியர்களுக்கு பணிப் பங்கீடு அளித்தல்)

15. தேசிய அளவில் நடைபெறும் NMMS, NTSE போன்ற தேர்வுகளில் மாணவர்கள் அதிக அளவில் பங்கு பெற்று வெற்றி பெறுவதற்கு ஊக்கப்படுத்துதல்.

16. மாணவர்களின் தனித்திறன் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் மன்ற செயல்பாடுகள் நடைபெறுவதை உறுதி செய்தல்.

17. மாணவர்கள் தனித்திறன் போட்டிகளில் கலந்துக்கொள்ள ஊக்கப்படுத்துதல்.

18. மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை பெற்றோர்கள் அறிந்து கொள்ள சுமுகமான முறையில் கலந்துரையாடல் மேற்கொள்ளல்.

19. பள்ளி மேலாண்மைக் குழுவை மாதம் ஒரு முறை கூட்டி, ஒட்டு மொத்த மாணாக்கர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்து கல்வி தரத்தை உயர்த்துதலை உறுதி செய்தல்.

20. இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலம் கற்றல் இடைவெளியை குறைத்து மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த மாணவர்களுக்கு வழிக்காட்டுதல்.

21. மாணவர்களுக்கு அரசின் அனைத்து நலத்திட்ட பொருட்களும் சென்றடைவதை உறுதி செய்து, EMIS இல் பதிவேற்றம் செய்தல்.

22. தொடக்க நிலையில் எண்ணும் எழுத்தும் திட்டம் செயல்படுவதை உறுதி செய்தல்.

23. மாணவர்களுக்கு நல்லொழுக்கம், தன்னம்பிக்கை சார்ந்த வாழ்வியல் திறன்களை வளர்க்க அவ்வப்போது தேவையான உளவியல் ஆலோசனையை தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் வழங்கி மாணவர்களை நெறிப்படுத்துதல்.

24. விளையாட்டு பாட வேளையில், மாணவர்களை விளையாட ஊக்கப்படுத்தி, உடல் நலமும், மன நலமும் பெற உதவுதல்.

25. தினந்தோறும் வழிபாட்டுக் கூட்டம் நடத்தி ஒரு சில மணித்துளிகள் நல்லொழுக்கக் கல்வி வழங்கி மாணவர்களை சென்றடைவதை உறுதிபடுத்துதல்.

26. மாணவர்கள் கைபேசியை பள்ளிக்கு கொண்டு வருவதை முழுவதுமாக தவிர்த்தல்.

27. பேருந்தில் பயணம் செய்யும் மாணவர்கள் பாதுகாப்பான பயணத்தை (படியில் நிற்பதை தவிர்த்து) மேற்கொள்ள அறிவுறுத்துதல்.

28. மாணவர்கள் Junk Food உட்கொள்வதை தவிர்த்து, சத்துள்ள உணவு வகைகளை உட்கொள்வதின் அவசியத்தை எடுத்துரைத்தல்.

மேற்காணும் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்தல், மேற்பார்வையிடுதல் போன்றவற்றை ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் கற்றல் மேம்படுவதை தலைமையாசிரியர்கள் உறுதி செய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் நெறிமுறைகளின்படி, ஒவ்வொரு பள்ளியும் செயல்படுவதை அனைத்து ஆய்வு அலுவலர்களும் உறுதிபடுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து ஆய்வு அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. தலைமையாசிரியர்கள், அனைத்து அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகள், சென்னை மாவட்டம்.